*16*

# பரிசுத்த கூடாரம் பற்றிய ஒப்பனை

## (9:1-14)

*எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் 8ம் அதிகாரத்தில், "மேன்மையான உடன்படிக்கை" என்பதன் மீது வலியுறுத்தம் இருந்தது (காண்க வசனம் 6). இருப்பினும் இந்த அதிகாரம், இயேசு ஒரு மேன்மையான பரிசுத்த ஸ்தலத்தைக் கொண்டிருக்கிறார் என்றும் சுட்டிக்காண்பித்தது: "மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும்" (வசனம் 2; காண்க வசனம் 5). இப்போது 9ம் அதிகாரத்தின் முதல் பாகத்தில், இயேசுவின் மேன்மையான பரிசுத்த ஸ்தலத்தின்மீது எழுத்தாளர் கவனம் குவிப்பதை நாம் காணுகிறோம். இந்த அதிகாரத்தின் முதல் வசனம், தலைப்புகள் ஒன்றாகப் பிணைக்கப் பட்டிருப்பதைக் காண்பிக்கிறது. முதல் உடன்படிக்கையானது, முதலாம் கூடாரத்தை அல்லது ஆசாரிப்புக் கூடாரத்தைப் பற்றியும் அதில் நிகழ்த்தப்பட்ட ஆராதனை ஊழியங்களைப் பற்றியும் கூறிற்று.*

*ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றிய படிப்பு மனதை ஈர்க்கக் கூடியதாக உள்ளது. ஆசரிப்புக் கூடாரம் பற்றிய ஆர்வத்திற்குரிய எல்லா உண்மைகளையும் பற்றிக் கவனிக்க நமக்கு நேரம் இருக்காது - ஆனால் எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரும்கூட இதைச் செய்யவில்லை (காண்க 9:5). நமது அணுகுமுறை 9:9ல் கருத்தாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது, இங்கு அவர் பழைய ஏற்பாட்டின் ஆசரிப்புக் கூடாரம் "இக்காலத்திற்கு உதவுகிற* ஒப்பனையாயிருக்கிறது*" (என்னால் வலியுறுத்தப்படுகிறது) என்று கூறினார். "ஒப்பனை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (parabole என்ற) வார்த்தை, "உவமை" என்பதை நாம் பெறும் வார்த்தையாக உள்ளது.[1] Parabole என்பது "அருகாக வைத்தல்" என்பதைக் குறிப்பிடுகிறது: "இது ஒப்பீடு செய்யும் கண்ணோட்டத்துடன், ஒரு விஷயத்தை இன்னொரு விஷயத்தின் அருகாக வைத்தல் என்பதைக் குறிப்பிடுகிறது."[2] செயல்விளைவில் எழுத்தாளர், பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலத்தை (ஆசரிப்புக் கூடாரத்தை) பரலோகத்தின் பரிசுத்த ஸ்தலத்திற்கு அருகாமையில் வைத்து அவ்விரண்டையும் ஒப்பிட்டார்.*

### வடிவமைப்பு/மாதிரி

*அந்த ஒப்பீட்டை மதித்து உணருவதற்கு நாம், பூமிக்குரிய ஆசரிப்புக் கூடாரத்தை முதலில் கண்ணோக்குவோமாக. 8ம் அதிகாரம் ஆசரிப்புக் கூடாரத்தின் "மாதிரி" பற்றியும் "மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும்" செய்வதன் முக்கியத்துவம் பற்றியும் பேசிற்று (வசனம் 5).*

### *ஆசரிப்புக் கூடாரத்தின் விபரங்கள் (9:1-5)*[3]

*முதல் ஐந்து வசனங்களில், ஆசரிப்புக் கூடாரத்தின் பல விபரங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. பின்வரும் அனைத்துப் பொருள்களும் ஆசரிப்புக் கூடாரத்தினுள் இருந்தன:*

- *பரிசுத்தஸ்தலம் (வசனம் 2).*[4]
- *பொன் குத்து விளக்கு (வசனம் 2).*
- *தேவசமூகத்து அப்ப மேஜை (வசனம் 2).*
- *இரண்டாம் திரை (பரிசுத்த ஸ்தலத்திற்கும் மகாப்பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையில் இருந்த திரை) (வசனம் 3).*
- *மகாப்பரிசுத்த ஸ்தலம் (வசனம் 3).*[5]
- *தூப பீடம் (வசனம் 4), இது "பொன்னால் செய்த பீடம்" என்றும் அறியப்பட்டுள்ளது. இது பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு முன்பாக வைக்கப்பட்டிருந்தது; தூபத்தில் இருந்து எழும்பிய புகை, மகாப்பரிசுத்த ஸ்தலத்திற்குள், காற்றில் மிதந்து சென்றதால், இதை மகாப் பரிசுத்த ஸ்தலத்துடன் இணைவுகொண்டிருந்த பீடம் என்று எழுத்தாளர் சித்தரித்தார்.*
- *உடன்படிக்கைப் பெட்டியும் அதில் இருந்த பொருள்களும் (வசனம் 4).*
- *கிருபாசனம் (உடன்படிக்கைப் பெட்டியின் மூடி) (வசனம் 5).*

*8ம் அதிகாரத்தின் எஞ்சிய பகுதியில், மற்ற விபரங்கள் சித்தரிக்கப் பட்டுள்ளன. பின்வரும் இரண்டு பொருள்களும் கூடாரத்திற்கு வெளியில் இருந்தன:*

- *வெண்கலத்தால் ஆன பலிபீடம் (வெண்கலத்தினால் மூடப்பட்ட பெரிய பீடம்) இருந்தது. இதில்தான் பலிகள் செலுத்தப் பட்டன, பலிசெலுத்தப்பட்ட மிருகங்களின் இரத்தம் சிந்தப்பட்டது. (இந்த பலிகள் பற்றிய குறிப்புகள் 7, 9, 11-13 ஆகிய வசனங்களில் காணப்படுகின்றன.)*
- *கைகழுவும் தொட்டி, வெண்கலப் பலிபீடத்திற்கும் ஆசரிப்புக் கூடாரத்திற்கும் இடையில் வைக்கப் பட்டிருந்தது. இங்கு சடங்காச்சாரமான "கழுவுதல்கள்" செய்யப்பட்டன (10ம் வசனத்தைக் காணவும்).*

### *சடங்குகளின் விபரங்கள் (9:6-10)*

*பரிசுத்த ஸ்தலத்தில் ஆசாரியர்களின் பொதுவான ஊழியம் முதலாவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது (வசனம் 6).*[6] *இது எழுத்தாளரின் விவாதத்தைப் பொறுத்த மட்டில் மாபெரும் தனிக்கவனத்திற்குரிய விஷயமாக இருப்பதில்லை. இது தற்காலிகமான இயல்பைக் கொண்டிருந்த ஊழியம் என்று மாத்திரம் அவர் குறிப்பிட்டார் (வசனம் 8). மகாப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியர் பிரவேசித்த, பாவநிவாரண நாள் மீதே அவரது குறிப்புகள் கவனம் குவித்தன (வசனம் 7; காண்க வசனம் 25).*[7]

# ஒப்பனை

***இதர இணைகருத்துக்கள்***

*பூமிக்குரிய மற்றும் பரலோகத்திற்குரிய உலகப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய விஷயங்களை நாம் ஒப்பிடுகையில், இவை எல்லாவற்றையும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஆண்டுகளினூடே பிரசங்கியார்கள், பூமிக்குரிய கூடாரம் மற்றும் கிறிஸ்தவம் ஆகியவற்றிற்கு இடையில் இணைக் கருத்துக்களை ஆலோசனை கூறுவதில் மகிழ்வடைந்துள்ளனர்.*

- *பரிசுத்த ஸ்தலத்தினுள் பிரவேசிப்பதற்கு முன்னதாக, ஆசாரியர்கள் கைகழுவும் தொட்டியில் கழுவினர், மற்றும் நாம் ஞானஸ்நானம் பெறுகிறபோது, நமது "உடல்கள் சுத்தமான தண்ணீரினால் கழுவப் படுகின்றன" (10:22).*
- *பொன் குத்துவிளக்கு பரிசுத்த ஸ்தலத்தின் வெளிச்சத்திற்கான ஆதாரமூலமாக இருந்தது, மற்றும் தேவனுடைய வசனமே நமது ஆவிக்குரிய வெளிச்சத்திற்கு ஆதாரமூலமாக உள்ளது (4:12; காண்க சங்கீதம் 119:105).*
- *தூபத்தின் புகையானது மகாப்பரிசுத்த ஸ்தலத்தினுள் காற்றில் மிதந்து சென்றது போலவே, நமது ஜெபங்கள் பரலோகத்திற்குள் எழும்புகின்றன (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 5:8; 8:3, 4).*

***பிரதான நோக்கம்***

*இருப்பினும், பழைய ஏற்பாட்டு ஆசரிப்புக் கூடாரத்தின் ஒவ்வொரு விஷயம் மற்றும் அதற்குச் சரிநேர் படிவமாகக் கிறிஸ்தவத்தில் இருந்த விஷயம் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு இணைகருத்தைத் தரவழைத்தல் என்பது எழுத்தாளரின் நோக்கமாக இருக்கவில்லை. எப்பொழுதும்போலவே, இயேசுவை உயர்த்துதல், அவரது மேன்மைத்துவத்தைக் காண்பித்தல் என்பதே அவரது நோக்கமாக இருந்தது. நமது பிரதான ஆசாரியர் என்ற வகையில் இயேசு, ...*

- *"கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, ஆனால் பரலோகத்திலேதானே" பிரவேசித்தார் (வசனங்கள் 11, 24).*
- *காளைகள் மற்றும் வெள்ளாட்டுக்கிடாக்களின் இரத்தத்தை அல்ல, ஆனால் தமது சொந்த இரத்தத்தைக் கொண்டு வந்தார் (வசனம் 12).*
- *தமது பாவங்களுக்காக அல்ல, ஆனால் நமது பாவங்களுக்காகப் பலியைக் கொண்டு வந்தார் (காண்க வசனங்கள் 7, 14; 4:15; 7:27).*
- *"வருஷத்திற்கு ஒருமுறை" (வசனம் 7) அல்ல, ஆனால் "ஒரேதரமாக" (வசனம் 12) மக்களுக்காக "ஒரேதரமாக" மற்றும் எல்லாக் காலத்திற்கும் "ஒரே தரமாக" (காண்க வசனங்கள் 25-28; 9:12; 10:10) பலியைக் கொண்டு வந்தார்!*

## கருத்து

*ஆகையால் எழுத்தாளர், பூமிக்குரிய ஆசரிப்புக் கூடாரத்தின் ஊழியத்தைப் பரலோக ஆசரிப்புக் கூடாரத்தின் அருகில் வைத்து, சில நேரெதிர் கருத்துகளைத் தரவழைத்தார். அவரது கருத்து என்னவாக இருந்தது?*

**நமது பரிசுத்த ஸ்தலம் மேன்மையானதாக உள்ளது.**

*நமது வசனப் பகுதியில் இருந்து பல பாடங்கள் கற்றுக்கொள்ளப் படமுடியும். நமது பரிசுத்த ஸ்தலம் மேன்மையானதாக உள்ளது என்பது அதில் ஒன்றாகும். தோற்றகால ஆசரிப்புக்கூடாரம் மகிமையுள்ளதாக இருந்தது. பூமிக்குரிய ஆசரிப்புக் கூடாரத்தினுள் இருந்த பொருள்கள் பொன்னினால் ஆனவையாக அல்லது பொன்னினால் மூடப்பட்டவையாக இருந்தன; இருந்த போதிலும் நமது ஆசரிப்புக்கூடாரம் அதிக மகிமையுள்ளதாக இருக்கிறது. அது பரலோகத்தில் இருக்கிறது!*

**நமது பலி மேன்மையானதாக உள்ளது.**

*இருப்பினும் நமது பலி மேன்மையானதாக உள்ளது என்று நாம் அறிய வேண்டும் என்றே எழுத்தாளர் முதன்மையாக விரும்பினார்.*

- *மிருக பலிகள் பழைய ஏற்பாட்டு முறைமையின் பாகமாக இருந்தன (வசனம் 10), அதே வேளையில் நமது பலியானது, புதிய ஏற்பாட்டு மீட்பின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது (வசனம் 12).*
- *மிருக பலிகள் மாம்சத்திற்கு உரியவையாக இருந்தன (வசனம் 13), அதே வேளையில் நமது பலியானது பாவங்களை மன்னிக்கிறது மற்றும் மனச்சாட்சியைச் சுத்திகரிக்கிறது (வசனம் 14).*
- *மிருகபலிகள் தற்காலிக சுத்திகரிப்பை விளைவித்தன (மறைமுகமாக உணர்த்தப் படுகிறது), அதே வேளையில் நமது பலியானது நித்திய மீட்பைக் கொண்டுவருகிறது (வசனம் 12).*
- *மிருகபலிகள் (யூதர்கள் என்ற) ஒருசிலருக்கானவைகளாக இருந்தன, அதே வேளையில் நமது பலியானது "அநேகருக்கானதாக" (வசனம் 28) - மனிதகுலம் முழுமைக்குமானதாக (2 கொரிந்தியர் 5:15) இருக்கிறது.*

**நமது ஊழியம் மேன்மையானதாக இருக்க வேண்டும்.**

*இது உண்மையாக உள்ளதால், கர்த்தருக்கான நமது ஊழியம் மேன்மையானதாக இருக்க வேண்டும். 14ம் வசனத்தின் பின்வரும் வார்த்தைகளைத் தவறவிட்டு விடாதீர்கள்: "கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள <u>தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு</u> உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்!" (என்னால் வலியுறுத்தப் படுகிறது). நாம் ஊழியம் செய்யும்படியாக இரட்சிக்கப் பட்டிருக்கிறோம்! அடுத்த அதிகாரத்தில் (19ம் வசனம் தொடங்கி), எழுத்தாளரின் மிக நீண்ட "ஊக்குவித்தலுக்கான வார்த்தை" தொடங்குகிறது.*

## போதகருக்குக் குறிப்புகள்

*சில காரணங்களினால் எழுத்தாளர், தமது விவரிப்பில் தேவாலயத்திற்கு மாறாக ஆசரிப்புக் கூடாரத்தைப் பயன்படுத்தினார். ஆசரிப்புக் கூடாரம் என்பது எடுத்துச் செல்லப்படக் கூடிய கூடாரமாக இருந்தது, அதே வேளையில் தேவாலயம் ஒரு நிரந்தரமான கட்டுமானமாக இருந்தது. ஆசரிப்புக் கூடாரம் மற்றும் அதில் செய்யப்படும் ஊழியம் ஆகியவற்றின் விபரங்கள் பற்றி நீங்கள் நன்கு அறிய விரும்பலாம் (யாத்திராகமம் 35-40).*

---

*குறிப்புகள்*

[1]NIV *வேதாகமம் இவ்வார்த்தையை "விவரிப்பு" என்று மொழிபெயர்த்திருக்கையில், பிலிப்ஸ் அவர்களின் மொழிபெயர்ப்பில் "சித்தரிப்பு" என்றுள்ளது.* [2]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 457. [3]*ஆசரிப்புக் கூடாரத்தின் வரைபடத்தைக் காணவும்.* [4]*6ம் வசனத்தில் பரிசுத்த ஸ்தலம் "வெளி [நேரடி அர்த்தத்தில் 'முதலாம்'] கூடாரம்" என்று அழைக்கப் பட்டுள்ளது.* [5]*7ம் வசனத்தில் மகாப்பரிசுத்த ஸ்தலம் "இரண்டாம்" கூடாரம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.* [6]*பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப் பட்டிருந்த பொருள்கள் ஒவ்வொன்றின் தொடர்பாகவும் ஆசாரியர்கள் என்ன செய்தனர் என்பவற்றைப் பற்றி நீங்கள் கூற விரும்பலாம்.* [7]*அந்த நாளில் நடைபெற்ற எல்லாவற்றையும் மறுகண்ணோட்டமிடுங்கள். "வருஷத்திற்கு ஒருமுறை" என்பது "ஆண்டில் ஒருநாள்" என்று அர்த்தப் படுத்துகிறது. அந்த நாளில் பிரதான ஆசாரியர் குறைந்த பட்சம் மூன்று முறைகள் மகாப் பரிசுத்த ஸ்தலத்தினுள் சென்றார்.*

## ஆசரிப்புக்கூடாரத்தில் ஆராதனையில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள்

